**தென்பகுதி வீதி இணைப்பு செயற்திட்டம் - 2020**

-----------------------------------------------------------------

தென்பகுதி வீதி இணைப்பு செயற்திட்டத்தின் 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிச குடியரசிற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2014 மே 27 ஆந் திகதிய 3027-எஸ்ஆர்ஐ ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் ii ஆம் உறுப்புரையின் 2.09 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

செயற்திட்டத்தின் கடன் உடன்படிக்கையின் பிரகாரம், துரைமுகங்கள் மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சாகவிருந்த நெடுஞ்சாலைகள் அமைச்சு நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் வீதி அபிவிருத்தி அதிகாரசபை செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவராக உள்ளது. தென்பகுதி நெடுஞ்சாலைகள் இணைப்பு வீதிகளின் 33 கிலோமீற்றர்களை தரப்படுத்தி புனரமைத்தல் மூலம் தேசிய போக்குவரத்து வினைத்திறனை முன்னேற்றுவதே செயற்திட்டத்தின் குறிக்கோளாகும். கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 12,248 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 95 மில்லியனானதுடன் அதில் ரூபா 9,025 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 70 மில்லியன் ஆசிய அபிவிருத்தி வங்கியால் நிதியளிக்கப்பட வேண்டுமென உடன்பாடு காணப்பட்டது. மீதித் தொகை ரூபா 3,223 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 25 மில்லியன் ஜிஓஎஸ்எல் இனால் நிதியளிக்க உடன்பட்டிருந்தது. செயற்திட்டமானது அதன் நடவடிக்கைகளை 2014 மே 27 ஆந் திகதி ஆரம்பித்திருந்ததுடன் 2018 திசெம்பர் 30 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டிருந்தது. இருப்பினும், செயற்திட்டத்தின் நடவடிக்கைகளின் பூர்த்தியாக்கல் திகதி 2021 திசெம்பர் 31 வரை நீடிக்கப்பட்டிருந்தது.

## 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களிலிருந்து செம்மையாக்கல்களின் தாக்கத்தை தவிர்த்து, செயற் திட்டத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாரா நிதி நிலைமையியும் நிதிச் செயலாற்றல் மற்றும் அதனது முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் அதனுடன் இனைந்த நிதிக் கூற்றுக்கள் என்பன இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க உண்மையானதும் நேர்மையானதுமான நிலைமை ஒன்றை தருகின்றது என்பது எனது அபிப்பிராயம் ஆகும்.

## 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கருத்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கருத்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு நலிவுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக உரிய உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

**2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| கணக்கீட்டுக் குறைபாடுகள் | தொகை ரூபா மில்லியன் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மத்திய வங்கியின் விசேட (டொலர்) கணக்கிலிருந்து உருவான ரூபா 13.22 மில்லியன் தொகையான மீள்மதிப்பீட்டு மிகை நடைமுறை வேலையில் பிழையாக செலவு வைத்தமை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இல.05 இற்கு முறனாக காணப்படுகின்றது. | 13.22 | இம் மீள்மதிப்பீட்டு மிகை 2021 இல் தேறிய சொத்துக்களின் கீழ் அடையாளப்படுத்தப்படும். | இலங்கை பொதுத்ததுறை கணக்கீட்டு நியமம் இல.05 இனை பின்பற்ற நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

**2.2 சட்டங்கள்,விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மை**

| இல | சட்டங்கள்,விதிகள், பிரமாணங்களுக்கான குறிப்புகள் | இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | பெறுகை வழகாட்டியின் பிரிவு 4.3.1 மற்றும் 2012 ஓகஸ்ட் 07 ஆம் திகதிய 2/2002 ஆம் இல நிதிச்சுற்றறிக்கை. | வழிகாட்டிகள் மற்றும் சுற்றறிக்கையின் பிரகாரம், உரிய ஒப்பந்தங்களின் மொத்த செலவு மதிப்பீடு சரியான முறையில் தயாரித்து ஒப்பந்ததாரரிற்கு ஒப்படைக்கப்படல் வேண்டும். இருப்பினும், ரூபா 826 மில்லியன் பெறுமதியான ஒப்பந்த பொதி 2 இலுள்ள 193 வேலை உருப்படிகள் முழுமையாக செய்யப்பட்டிராததுடன் ரூபா 168 மில்லியன் தொகையான 68 வேலை உருப்படிகள் ஒப்பந்ததாரரினால் பகுதியாக செய்யப்பட்டுமிருந்தது. அதன் பெறுபேறாக, ரூபா 149 மில்லியன் பெறுமதியான வேலை ஆரம்பிப்பு முற்பணம் செய்யப்படாத வேலைகளிற்காக மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது. | விலைமனுக் கூட்டத்தில் விபரிக்கப்பட்ட வேலைப்பரப்பு புதிய தேவைப்பாடுகள் காரணமாக நிர்மான கட்டத்தின் போது மாற்றியமைக்கப்பட்டிருந்தது. மொத்த செலவு மதிப்பீடு இறுதி ஒப்பந்த விலையிலிருந்து வேறுபடுவதற்கு இதுவே காரணமாகும். | விபரமான பொறியியல் கற்கைகள் செய்யப்பட வேண்டியதுடன் அளவைப்பட்டியல் தயாரிப்பதற்கு முன்னர் சரியான வேலைப்பரப்பினை அடையாளப்படுத்தலும் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | 2006 அரச வழிகாட்டியின் பிரிவு 8.13.4. | ஒப்பந்த பொதி 02 இன் மொத்த கிரயம் ரூபா 3,064 மில்லியனாக இருந்ததுடன் அதில் 20 சதவீதத்தினை பிரதி நிதித்துவப்படுத்தும் ரூபா 510 மில்லியன் தொகை அதனடுத்த மாற்றங்களிற்காக நிகழத்தக்க ஏற்பாடாக வழங்கப்பட்டிருந்தது. இருப்பினும், செயற்திட்டமானது 2006 அரச பெறுகை வழிகாட்டிகளின் பிரிவு 8.13.4 இன் பிரகாரம் தேவையான அனுமதி பெறப்படாமல் நிர்மானத்தில் அதனடுத்த வேலைப்பரப்பு மாற்றம் காரணமாக மொத்த ஒப்பந்த பெறுமதியில் 51 சதவீதத்தினை பிரதிநிதித்துவப்படுத்தும் மொத்தமாக ரூபா 1,573 மில்லியன் மாறல்கள் செய்யப்பட்டிருந்தன. | 2006 அரச பெறுகை வழிகாட்டியின் பிரிவு 8.13.4 இன் படி தேவையான அனுமதி மேற்கூறிய கொடுப்பனவை செய்ய எடுக்கப்பட்டிருந்தது. | பெறுகை வழிகாட்டியினை பின்பற்ற நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் கொடுப்பனவு விடுவிக்கப்பட முன்னர் உரிய அதிகார சபையிடமிருந்து தேவையான அனுமதிகள் பெறப்படவும் வேண்டும். |

## 3. பௌதீக முன்னேற்றம்

### 3.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக முன்னேற்றம்

| விடயங்கள் | 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | கணக்காய்வு விடயங்கள் | தாமதங்களிற்கான காரணம் |
|---|---|---|---|---|
| | எதிர் பார்க்கப்பட்ட பௌதிக செயலாற்றல் | அடையப்பட்ட செயலாற்றல் | | |
| | சதவீதம் | சதவீதம் | | |
| (அ) அம்பத்தல – சினேக் சந்தி வீதி | 100% | 99% | ஒப்பந்தம் 483 நாட்கள் தாமதமாக காணப்பட்டது. | கோவிட் - 19 தொற்று நிலமைகள். |
| (ஆ) கிருலப்பானை தொடக்கம் கொடகம மற்றும் பாமன்கட தொடக்கம் பொகுனுவிட்ட வரையான தெரிவு செய்யப்பட்ட வீதி பிரிவுகள். | | | செயற்திட்ட நடவடிக்கைகளின் உண்மை செயலாற்றல் எதிர்பார்க்கப்பட்ட செயலாற்றலிற்கு பின்னடைவாக காணப்பட்டது. | கோவிட் - 19 தொற்று நிலமைகள். |
| - உண்மையான நிகழ்ச்சித்திட்டத்தின் படி | 68% | 21% | | |
| - மாற்றியமைக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டத்தின் படி | 44% | 44% | | |

| | |
|---|---|
| **முகாமைத்துவத்தின் கருத்துரைகள்** | பயன்பாடுகளின் அப்புறப்படுத்தல் செயன்முறையை விரைவுபடுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. வேலை நாட்கள் கோவிட்-19 தொற்று நிலைமை காரணமாக குறிப்பிடத்தக்களவு குறைக்கப்பட்டுள்ளதுடன் இது குறித்து முன்னேற்றத்திற்கு வழிவகுக்கும். |
| **கணக்காய்வாளர் பரிந்துரைகள்** | இலக்கிடப்பட்ட திகதிகளில் வேலைகளை பூர்த்தி செய்வதனை துரிதப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

### 3.2 ஒப்பந்த நிர்வாகம்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|
| ரூபா 248.6 மில்லியன் தொகையான ஒப்பந்ததாரர் இறுதி கொடுப்பனவு பத்திரம் செயற்திட்டத்தினால் கொடுத்து தீர்க்கப்பட்டிராததுடன் ஒப்பந்த மேலதி கிரயங்களிற்காக கடன் வழங்கும் முகவரிடமிருந்தான அனுமதியில் தாமதம் காரணமாக 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கூட சுமார் 1 1/2 வருடங்கள் செலுத்த வேண்டிய பொறுப்பாக காணப்பட்டது. ஒப்பந்ததாரர் கொடுப்பனவுகளின் தீர்ப்பனவில் தாமதம் செயற்திட்டத்தின் கிரயத்தனை அதிகரிப்பதில் தாக்கம் செலுத்தும். | பொறியியலாளர் உறுதிப்படுத்தி ஒப்பந்த பொதி 03 இற்காக ரூபா 2,279,809,993.98 தொகையுடன் ஐபீசி 29 இனை அனுப்பியிருந்தார். ரூபா 248,604,443.25 கொடுப்பனவினை செய்ய தேவையான நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | வட்டி கிரயங்களை குறைக்க தாமதமின்றி ஒப்பந்ந உடன்படிக்கையின் பிரகாரம் ஒப்பந்ததாரரின் பொறுப்பினை கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

### 3.3 மனிதவள முகாமைத்துவத்துடன் தொடர்புடைய விடயங்கள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|
| கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், அரசாங்கத்திற்கு சொந்தமான 548 காணித்துண்டுகள் உள்ளடங்களாக 3,558 காணித்துண்டுகளை கொள்வனவு செய்ய படடியலிடப்பட்டிருந்தது. மொத்தமாக ரூபா 9,500 மில்லியன் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணி கொள்வனவு செலவிற்காக செயற்திட்டத்தினால் செய்யப்பட்டிருந்ததுடன் அதில், ரூபா 5,243 மில்லியன் காணி சுவீகரிப்பு மற்றும் மீளவழங்கள் குழுக்களின் தீர்மானத்தின் கீழ் அதன் மீது செய்யப்பட்டிருந்தது. அதற்கு மேலதிகமாக, மொத்தமாக ரூபா 289 மில்லியன் 2020 திசெம்பர் 31 வரை இழப்பீடுகளின் கொடுப்பனவில் | காணி இழப்பீட்டு செயன்முறைக்கான கொடுப்பனவு இருக்கும் நிதிகளின் அடிப்படையில் மிகுதி காணி துண்டுகளிற்காக செயன்முறையில் உள்ளது. கொள்வனவு செய்யப்பட்ட காணிகளிற்கான செலுத்த வேண்டிய வட்டி கொடுப்பனவு காணி சுவீகரிப்பு சட்டத்தின் பிரிவு 44 இன் கீழ் பதிவு செய்ய முன்னர் முழுமையாக தீர்க்கப்படல் வேண்டும். | காணி சுவீகரிப்பு நடவடிக்கைகளை துரிதப்படுத்தவும் காணி உரிமையை வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு மாற்றவும் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

தாமதம் மீதான வட்டியாக செலுத்தப்பட்டிருந்தது. இருப்பினும், எவ்வித காணித்துண்டுகளும் காணி சுவீகரிப்பு சட்டத்தின் பிரிவு 44 இன் கீழ் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை.